இருக்கின்றன என்றும் சொன்னார்கள். அங்கே கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்தால் எறும்பூர், சின்ன நற்குணம், நெல்லிக்கொல்லை, குறிஞ்சிக்கொல்லை, மதிவாணமேடு, ஆனைவாரி, அம்மன்குப்பம், மேல்பழையமாதேவி, கீழ்பழையமாதேவி, கத்தாழை, முத்துகிருஷ்ணாபுரம், மணக்காடு, நல்லதண்ணீர்குளம் ஆகிய பல்வேறு கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் என்றும் சொன்னார்கள். கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு விதிகளில் இடமில்லை என்றாலும், சிறப்பு நேர்வாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே சொல்லி, விதிகளைத் தளர்த்தி, கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கிளை நிலையம் அமைப்பதற்கு இந்த நிதியாண்டில் நிதிநிலைமையைச் சீர்செய்து அம்மா அவர்கள் கொடுத்தால், உடனடியாக அவர்களுக்கு அங்கே கிளை நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அருள்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில், நல்லதொரு பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் கோட்டத்திற்கு இந்த ஆண்டு 250 பேருந்துகள் புதியதாக வாங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இலாகாவையே மாற்றுகிறீர்கள்.

வினா எண் 115, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

115—

உயிரியல் பூங்கா

***10585—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 31

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உயிரியல் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 116, திரு. ஆர். வடிவேல், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

முற்பகல் 11-05

116—

சாலை வசதி

***50492—திரு. ஆர். வடிவேல்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட நத்தணா மலையில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு சாலை வசதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட நக்கணா மலைக்குப் பொது மக்கள் மற்றும் கால்நடைகள் சென்றுவர இரண்டு மீட்டரில் நடைபாதை உரிமை தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதனை சாலையாக மாற்றி அமைக்க, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். வனச் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.